RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s726

OPEN ACCESS

# எஸ். ராமகிருஷ்ணனின் சஞ்சாரம் புதினத்தில் வெளிப்படும் தற்காப்பு உத்திகள்

**கி. ப்ரியா மகேசுவரி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி, கிழக்குத் தாம்பரம், சென்னை-600059, தமிழ்நாடு, இந்தியா.

# S. Ramakrishna's Sancharam Novel Discloses Defensive Strategies

**K. Priya Maheswari** [a, *]

[a] Department of Tamil, Madras Christian College, East Tambaram, Chennai-600059, Tamil Nadu, India

* Corresponding Author: priyamaheswari1995@yahoo.com

Received: 03-12-2021
Revised: 16-04-2022
Accepted: 02-05-2022
Published: 29-07-2022

Check for updates

**ABSTRACT**

Literature is related to human life. It records various events of human life. In this way, S. Ramakrishnan's Sancharam is a novel literature that aims to depict the life events of Nathswara artists who have black soil as their living environment. The Sahitya Academy award-winning novel 2018 explores various issues in the life of an artist. Through this article, we can learn about the value given by the society to the two Nathswara artists born and raised in the land of black soli and the life of Nathswara artists who lived in the early period. The story revolves around two central characters, Pakiri and Rathanam. In the course of their lives, these men think of various Nathswara artists who lived in the past. One of those scholars is Thananasi. He is a proficient in reciting nataswaram, he is shown to be blind. Growing up without his mother's warmth, he yearns for love. This anxiety creates depression. He engages in certain behaviors to reduce this risk. The purpose of this paper is to examine the behaviors of Thananasi and to uncover the psychological reasons for the behaviors. His behaviors have been studied in terms of defense strategies which are one of the psychological components. Coping and retrogression are two defense strategies that manifest in these behaviors that are highlighted in this review. These defense techniques are given as a result of the research to protect his mind.

**Keywords:** Psychology, Depression, Defense Strategies, Coping, Retrospection

## முன்னுரை

மனிதனுக்கும் சமூகத்திற்கும் நிலவி வரும் உறவினை இலக்கியம் வெளிப்படுத்துகிறது. இது கவிதை, சிறுகதை, புதினம் என வெவ்வேறு வடிவங்களில் மனித வாழ்வின் பரிமாணங்களைக் காட்டுகிறது. மனித வாழ்வோடு கலையும் ஒன்றாகக் கலந்திருக்கிறது. கலைகளுள் சிறப்புப் பெற்றது இசைக் கலையாகும். அவ்விசைக் கலையில் மங்கல இசையாக நாதஸ்வர இசை கருதப்படுகிறது. இவ்விசைக்கலைக்குத் தமிழ்நாடு முக்கியத்துவம் தருகிறது (Moovendhan, 2021). நாதஸ்வரத்தினை இசைக்கும் கலைஞர்களின் வாழ்க்கையைக் குறித்து எழுந்த தமிழ் இலக்கியமாகச் சஞ்சாரம் எனும் புதினம் அமைகிறது. இதில் கலைஞர்களின் அன்றாட வாழ்வியல் போராட்டங்கள் காட்டப்படுகின்றன. சாதி ஏற்றத்தாழ்வுகளால் கலைஞர்களுக்கு நேரிடும் அவமானங்களையும் அவற்றை அவர்கள் எதிர்கொள்ளும் தன்மைகளையும் இப்புதினத்தில் வெளிப்படுத்துகிறார் (Ramakrishanan, 2019). பக்கிரி, ரத்தினம் ஆகிய இரு கலைஞர்களின் வாழ்க்கையைச் சித்தரிப்பதாக இப்புதினத்தின் கதை

அமைக்கப்பட்டுள்ளது. இவர்கள் தங்கள் காலத்திற்கு முன்பு வாழ்ந்த பல நாதஸ்வரக் கலைஞர்களை நினைத்துப் பார்ப்பதாகக் கதை அமைக்கப்பட்டுள்ளது (Dharani & Sumathi, 2021). அந்த வகையில் பார்வையற்ற தன்னாசி எனும் நாதஸ்வரக் கலைஞனின் வாழ்க்கை, நடத்தைகள் உளவியல் கோட்பாட்டுக் கூறுகளுள் ஒன்றான தற்காப்பு உத்திகளின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இவனது நடத்தைகளுக்கான உளவியல் காரணங்களைக் கண்டறிவது இவ்வாய்வின் நோக்கமாகும்.

## தற்காப்பு உத்திகள்

உள்ளத்தின் இயல்புகளைப் புரிந்து கொள்ள உளவியல் உதவுகிறது. உளப்பகுப்பாய்வின் தந்தை என்று அழைக்கப்படும் ஃபிராய்டு மனித மனத்தை இட், ஈகோ, சூப்பர் ஈகோ என்று பகுக்கிறார். இன்ப நாட்டம் கொண்ட பகுதியாக இட்டும் சமூக நெறிமுறைகளைக் கொண்ட பகுதியாகச் சூப்பர் ஈகோவும் அமைகின்றன. இட்டிற்கும் சூப்பர் ஈகோவிற்கும் இடையில் நின்று செயல்படும் பகுதி ஈகோ என்னும் தன்முனைப்பு மனமாகும். ஆசைகளைச் சமூக எண்ணங்களுக்கு ஏற்றவாறு அமைக்க ஈகோ என்னும் தன்முனைப்பு மனம் பாடுபடுகிறது. இட்டையும் சூப்பர் ஈகோவையும் சமநிலைப்படுத்த சில வழிமுறைகளை ஈகோ கைக்கொள்கிறது. இதனைத் தற்காப்பு உத்திகள் என்று உளவியலறிஞர்கள் குறிப்பிடுவர்.

"இந்தத் தற்காப்பு உத்தி என்பதை 1894 இல் ஃபிராய்டு தனது தி நியூரோ சைகோசிஸ் ஆப் டிபென்ஸ் என்பதிலும் மற்றும் தனது இதர படைப்புகளில் துன்பமான அல்லது ஏற்க முடியாத சூழலுக்கு எதிரான ஈகோவின் போராட்டத்தினைக் குறிக்கவும் பயன்படுத்தியுள்ளார்" (Anna Freud, 1993).

இவருக்குப் பிறகு தற்காப்பு உத்திகளைக் குறித்து விரிவாக அன்னா ஃபிராய்டு ஆராய்ந்துள்ளார். தனது ஈகோ அண்ட் தி மெக்கானிசம் ஆப் டிபென்ஸ் என்னும் நூலில் பத்து தற்காப்பு உத்திகள் குறித்துக் கூறுகிறார். இவ்வுத்திகள் குறித்து இன்றளவும் பல உளவியலாளர்கள் ஆய்வுசெய்கின்றனர். இந்தத் தற்காப்பு உத்திகள் நனவிலி நிலையில் வெளிப்படுவதாக உள்ளன.

ஒருவனின் மனதில் ஏற்பட்ட ஆசை நிறைவேறாத போது, மனமுறிவு மற்றும் மனத்தவிப்பு ஏற்படுகிறது. இவ்விரண்டும் மனப் போராட்டத்திற்கு வழிவகுக்கின்றன. "மனப்போராட்டத்தினால் உளச் சமநிலை பாதிக்கப்படுகிறது. உளச் சமநிலை சரி செய்ய முடியாத அளவுக்குப் பாதிக்கப்படும்போது அவன் பிறழ்நிலை கொண்ட நோயாளி ஆகிறான். இந்த நிலையை ஒருவன் அடைந்து விடாமல் காப்பது காப்பு உத்திகள்" (Kanchana, 2007).

ஆழ்மனதில் புதைத்தல், விருப்பப்புனைவு, பகற்கனவு, பதிலீடு, ஈடு செய்தல், அடையாளம் காணல், புறத்தெறிப்பு, காரணம் காட்டல், சில கூறுகளை மட்டும் மறத்தல், விழுப்பமுடைமையாக்கல், எதிர்செயல் உருவாக்கம், உண்மையை ஏற்க மறுத்தல், இடமாற்றம், பின்னோக்கம் ஆகியன தற்காப்பு உத்திகளாகக் கொள்ளப்படுகின்றன.

## சஞ்சாரம் புதினத்தில் இடம்பெறும் தன்னாசி

சஞ்சாரம் புதினத்தின் மைய மாந்தர்களான பக்கிரியும் ரத்தினமும் சில புகழ்பெற்ற நாதஸ்வரக் கலைஞர்களை நினைத்துப் பார்க்கிறார்கள். பார்வையற்றவனான தன்னாசி நாதஸ்வரத்தை இசைப்பதில் வல்லவனாகத் திகழ்ந்துள்ளதைப் புதினத்தின் வழி அறிந்து கொள்ள முடிகிறது. அக்கலைஞனின் திறமையைப் போற்றும் வகையில் ஒரு தாசி அவனுக்குச் சோலையூரில் சமாதி ஒன்றைக் கட்டியுள்ளதாகக் கதையில் காட்டப்படுகிறது. அந்தச் சமாதியை நாதஸ்வரக் கலைஞர்கள் கோயில் என்று அழைக்கிறார்கள். கைக்குழந்தையான தன்னாசியை அவனது தந்தை ஒரு பாட்டியிடம் விட்டு விடுகிறார். அன்பும் அரவணைப்பும் இல்லாமல் வளர்ந்து வரும் தன்னாசிக்குச் சரஸ்வதி என்ற பெண்ணுடன் நட்பு ஏற்படுகிறது. தன்னை வளர்த்து வந்த பாட்டி இறந்து விடவே, சரஸ்வதியின் வீட்டில் தங்கிக் கொள்ள அவனுக்கு அனுமதி கிடைக்கிறது. சரஸ்வதி அவன் மீது முழுமையான அன்பினைக் காட்டுகிறாள். இவர்களது நட்புறவு சரஸ்வதியின் பெற்றோரால் தவறாகப் புரிந்து

கொள்ளப்படுகிறது. இருவரும் ஏசப்படுகிறார்கள். பெற்றோரின் ஏசுதலைத் தாங்க முடியாமல் சரஸ்வதி தற்கொலை செய்து கொள்கிறாள். அவளது இழப்பினைத் தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் தன்னாசி மனம் உடைந்து போகிறான். ஒரு நாள் எங்கிருந்தோ யாரோ ஒருவர் இசைக்கும் நாதஸ்வர இசையைக் கேட்டு அவன் அதைக் கற்றுக்கொள்ள எண்ணுகிறான். நாதஸ்வரக் கலையில் பெரும் புகழோடு திகழ்ந்த தன்னாசி தன் வாழ்க்கையில் எப்போதும் மற்றவர்கள் மீது ஒரு கசப்புணர்வு கொண்டிருந்ததாகப் புதினத்தில் படைத்துக் காட்டுகிறார் (Ramakrishanan, 2019).

## தன்னாசியின் தற்காப்பு உத்திகள்

தன்னாசி பார்வையற்றவனாகக் கதையில் காட்டப்படுகிறான். கைக்குழந்தையிலிருந்து பாட்டியிடம் வளரும் அவனுக்குத் தாயின் அன்பும் அரவணைப்பும் கிடைக்கவில்லை. ஒன்பதாவது வயதில் பக்கத்து வீட்டு சரஸ்வதியோடு பழகுவதற்கு அவனுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. சரஸ்வதி அவன் மீது அன்பும் பரிவும் காட்டுகிறாள். அவளது அன்பும் அக்கறையும் அவனுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தன என்பதை,

"சரஸ்வதி அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு 'நீ எதுக்கும் பயப்படாதே நான் இருக்கேன்' என்றாள். அப்படி அவள் சொன்ன விதம் தன்னாசிக்குக் கண்ணீரை வரவழைத்தது. அவனது வாழ்க்கையில் இப்படி ஒருவரும் பரிவு காட்டியதேயில்லை" என்னும் உரையாடல் வழி உணர முடிகிறது (Ramakrishanan, 2019).

பார்வையற்றவனாக இருக்கும் தன்னாசி அன்பிற்காக ஏங்குபவனாக இருக்கிறான். அவன் எதிர்பார்த்த அன்பு சரஸ்வதி வாயிலாகக் கிடைப்பது அவனுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக இருந்தது. சரஸ்வதியின் தந்தையிடம் தச்சு வேலையைக் கற்றுக் கொள்கிறான். அவன் எதைச் செய்தாலும் சரஸ்வதி அவனைப் பாராட்டினாள். அவன் சரஸ்வதியின் மடியில் படுத்துக் கொள்ள ஆசைப்படுவதாகக் கதையில் காட்டப்படுகிறது. அப்போது அவன் சரஸ்வதி மடியில் படுத்துக்கொண்டு அழுகிறான். தாயின் பாசத்திற்காக ஏங்கும் அவன் தனது தாயின் பதிலியாகச் சரஸ்வதியைப் பார்க்கிறான் என்பதை இதன்வழி உணர்ந்து கொள்ள முடிகிறது.

இந்த நட்புணர்வினைச் சரஸ்வதியின் பெற்றோர் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். பெற்றோரின் ஏசுதலைத் தாங்கிக் கொள்ள முடியாமல் சரஸ்வதி தற்கொலை செய்து கொள்கிறாள். அவளது திடீர் மரணம் தன்னாசியின் மனநிலையைப் பாதிக்கிறது. அவன் சரஸ்வதியை எரித்த சுடுகாட்டில் நாள் முழுவதும் தங்கிக் கொண்டிருக்கிறான். அந்த வேளையில் ஒருநாள் யாரோ ஒருவர் இசைக்கும் நாதஸ்வர இசையைக் கேட்டு அதைக் கற்றுக்கொள்ள அவன் விரும்புகிறான்.

"தட்டுத்தடுமாறி விசாரித்து நாதஸ்வரம் வாசித்த தென்பாடியார் காலில் விழுந்து வணங்கி 'இந்த நாதஸ்வரத்தை எனக்கும் வாசிக்க கற்றுக் கொடுங்கள் நான் கண்ணு தெரியாத கபோதி' என்றான். தென்பாடியார் அவனைத் தூக்கி விட்டு 'நீ எதுக்குப்பா கத்துக்கிட ஆசைப்படுறே' எனக் கேட்டார். 'இதைக் கேட்கும்போது தான் மனசு ஆறுதல்படுது இல்லேன்னா சாகணும்னு மட்டும்தான் தோணிகிட்டு இருக்கு'..." என்று தன்னாசி கூறுவதிலிருந்து தன் மனதைத் தேற்றிக் கொள்வதற்காக அவன் நாதஸ்வரத்தைக் கற்றுக் கொள்ள விரும்புவதை அறிந்து கொள்ள முடிகிறது (Ramakrishanan, 2019). நாதஸ்வரத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற இந்த எண்ணம் அவனது தன்முனைப்பு மனம் மேற்கொள்ளும் ஒரு தற்காப்பு உத்தியாகும்.

## ஈடுசெய்தல் எனும் தற்காப்பு உத்தி

தன் தாயின் பதிலியாகப் பார்த்த சரஸ்வதியின் இழப்பினைத் தாங்கிக்கொள்ள முடியாத அவனது மனம் தவிப்பினை எதிர்கொள்கிறது. இத்தவிப்பினைத் தணித்துக் கொள்ள அவனது தன்முனைப்பு மனம் ஈடுசெய்தல் எனும் தற்காப்பு உத்தியை மேற்கொள்கிறது.

"ஒரு தோல்வியை ஈடு செய்வதற்கு வேறு ஒன்றில் முயற்சி செய்து வெற்றி பெறுவதை ஈடு செய்தல் என்னும் தற்காப்பு உத்தியாக உளவியலாளர்கள் குறிப்பிடுவர்."

பார்வையற்றவனான தன்னாசி குரல்களின் வழிதான் மனிதர்கள் தன் மீது காட்டும் உணர்வுகளை உணர்கிறான். குறிப்பாக, சரஸ்வதியின் குரலில் உள்ள இனிமை அவனுக்கு ஒரு தாயின் பரிவைப் போல இருந்ததை அவன் உணர்ந்ததாகக் கதையில் காட்டப்படுகிறது. அதேபோல் நாதஸ்வர இசையின் இனிமை அவனுக்கு ஆறுதல் அளிப்பதாக உணர்கிறான். சரஸ்வதி தன் மீது காட்டிய அன்பினை இழந்த நிலையில் அதனை ஈடுசெய்வதற்காக இனிமையான ஓசையையுடைய நாதஸ்வர இசையைக் கற்றுக்கொள்ள முடிவெடுக்கிறான். இந்த ஈடு செய்தல் எனும் தற்காப்பு உத்தி அவனது நனவிலி நிலையில் தோன்றி, அவனது மனத்தவிப்பினைக் குறைப்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

தன்னாசி நாதஸ்வரக் கலையில் புகழினை அடைந்தாலும் அடுத்தவர்களைத் துன்புறுத்தும் மனநிலை அவனுக்குள் இருந்ததை கதையில் குறிப்பிட்டுக் காட்டுகிறார் (Ramakrishanan, 2019). மற்ற மனிதர்களை மிகவும் இழிவாகப் பேசும் தன்மையும், குரூரமாக வதைக்கும் தன்மையும் அவனுக்கு இருந்தது. இவனது இந்த நடத்தைக்கான உளவியல் காரணமாக அமைவது அவனது தன்முனைப்பு மனதின் தற்காப்பு உத்தியாகும்.

## பின்னோக்கம் எனும் தற்காப்பு உத்தி

சரஸ்வதியின் இழப்பிலிருந்து தன் மனதைக் காத்துக் கொண்டாலும் அவனது ஆழ்மனதில் தன்மீது அன்பு காட்ட எவருமில்லை என்ற எண்ணம் பதிந்திருந்தது. அதேபோல் மற்றவர்கள் மீது ஒரு நம்பிக்கையின்மையும் அவனுக்கிருந்தது. இந்த எண்ணத்தால் உருவாகும் மனத்தவிப்பினைத் தணித்துக்கொள்ள அவனது மனம் பின்னோக்கம் என்னும் தற்காப்பு உத்தியைப் பயன்படுத்துகிறது.

"மிகவும் மன அழுத்தம் தரக்கூடிய சூழல்களில் மக்கள், சில சமாளிக்கும் நெறிமுறைகளை தவிர்த்துவிட்டு தங்களுடைய குழந்தைப்பருவத்தில் தாங்கள் மேற்கொண்ட செயல்களுக்குத் திரும்புவார்கள். இதனைப் பின்னோக்கம் என்று உளவியலாளர்கள் குறிப்பிடுகிறார்கள்."

ஃபிராய்டு மற்றும் எரிக்சன் குழந்தையின் வளர்ச்சியைக் குறித்துக் குறிப்பிடுகையில் சில வளர்ச்சிப் படிநிலைகளைக் காட்டுகிறார்கள். ஒவ்வொரு படிநிலைகளிலும் குழந்தை ஒரு நல்ல எண்ணத்தையோ அல்லது ஒரு தீய எண்ணத்தையோ உருவாக்கிக் கொள்கிறது என்று எரிக்சன் கருதுகிறார். குறிப்பாகக் கைக்குழந்தையாக இருக்கும் நிலையில் தாயின் அன்பினைப் பெறாத குழந்தை எதிர்காலத்தில் மற்றவர்கள் மீது நம்பிக்கையின்மையைக் கொண்டு வாழ்வதாக எரிக்சன் குறிப்பிடுகிறார்.

குழந்தைப் பருவத்தில் பார்வையற்றவனான தன்னாசி கோழிக்குஞ்சுகளை அடைத்து வைக்கும் பஞ்சாரத்தில் வளர்ப்புப் பாட்டியால் அடைக்கபட்டான் என்பதையும் அவன் அழுதாலும் பால் கிடைக்காத நிலை இருந்ததையும் கதையில் குறிப்பிடுகிறார் (Ramakrishanan, 2019). தாயின் அன்பு கிடைக்காத சூழலில் வளரும் அவனுக்குப் பிறர் மீது நம்பிக்கையின்மை உருவாகிறது. சிறு வயதில் எவர் என்ன சொன்னாலும் கேட்காத பிள்ளையாக அவன் வளர்ந்தது காட்டப்படுகிறது.

சரஸ்வதிக்குப் பின் தன் மீது அன்பு செலுத்த எவரும் இல்லை என்ற ஏக்கமும் பிறர் மீது கொண்டுள்ள நம்பிக்கையின்மையும் அவனுக்கு மனத்தவிப்பினை ஏற்படுத்துகின்றன. அதனைச் சரி செய்வதற்காக அவன் குழந்தைப் பருவ நிலையில் மேற்கொண்ட சில செயல்முறைகளைச் செய்கிறான். இங்கு அவனது பின்னோக்கமாக மற்றவர்கள் மீது வெறுப்புணர்வோடு நடந்து கொள்ளுதல் என்னும் முறை காணப்படுகிறது.

"அவருக்கு மற்றவர்களைக் குரூரமாக இம்சை செய்வதும், மூர்க்கமாக நடந்து கொள்வதும் பிடித்திருந்தது. அவர் எப்போது எப்படி வதைப்பார் என்று தெரியாது. அவரது மனதில் விசித்திரமான கற்பனைகளும் குரூரமான ஆசைகளும் உருவாகின. அதை வடித்துக் கொள்ள அவர் செய்யாத இம்சைகளில்லை.

ஒரு நாள் கடமலைக்குண்டிற்கு வாசிப்பதற்காகப் போய்விட்டு திரும்பும் போது வழியில் பக்கத்தில் உட்கார்ந்து வந்த தவில்காரன் கால் அவர் மீது பட்டு விடவே அப்படியே வண்டியில் இருந்தபடியே பிடித்து வெளியே தள்ளி விட்டார் தன்னாசி. அடிப்பட்டதில் வலது கை முறிந்து போனது தவில்காரனுக்கு" என்பதிலிருந்து அவர் மற்றவரிடம் கோபமாக மற்றும் முரட்டுத்தனமாக நடந்து கொண்டதை அறிந்து கொள்ள முடிகிறது (Ramakrishanan, 2019).

அன்னா ஃபிராய்டு பின்னோக்கத்தில் இடம் பெறும் செயல்கள் யாவும் குழந்தைப்பருவ வளர்ச்சிப் படிநிலையின் தேக்கங்களாகும் என்கிறார். தாயின் அன்பினைப் பெறாத ஒரு குழந்தை மற்றவர் மீது எப்போதும் கோபமும் வெறுப்பும் கொள்ளும் மனநிலை கொள்கிறது. இந்த நிலையில் தேக்கம் பெற்ற ஒரு குழந்தை பிற்காலத்தில் இதனைப் பின்னோக்கமாகக் கொண்டு தன் மனதைக் காத்துக் கொள்கிறது. அந்த வகையில் தன்னாசியிடம் காணப்படும் மனநிலை அவனது குழந்தைப் பருவத் தேக்கநிலைச் செயல்பாட்டினைக் கொண்ட பின்னோக்கமாக அமைகிறது.

"இறந்தவர்கள் இனி வரவே மாட்டார்கள் என்பது எவ்வளவு துரதிருஷ்டம். இத்தனை காலம் ஆகியும் ஏன் சரஸ்வதி தனது நினைவில் இருந்து விலகிப் போக மறுக்கிறாள். அந்த நினைவு பெருகத் துவங்கியதும் அவர் மூர்க்கம் கொண்டு விடுவார். தன்னோடு துயிலும் பெண்ணின் உடலை கடித்து தின்பதுபோல் வெறி கொள்வார். கூந்தலைப் பிடித்து இழுத்து அடிப்பார். வலியில் அப்பெண்கள் கதறும்போது தானும் சேர்ந்து கொண்டு அழுவார். இந்த மனிதன் ஏன் இப்படி நடந்து கொள்கிறான் என ஒருவருக்கும் தெரியாது" (Ramakrishanan, 2019).

அவனது குழந்தைப் பருவத்தில் தேக்க நிலையிலிருந்த வெறுப்புணர்வு மனத்தவிப்பு ஏற்படும் சூழலில் பின்னோக்கமாக அமைந்து மனத்தவிப்பைத் தடுக்கிறது என்பதை அறிய முடிகிறது.

## முடிவுரை

தன்னாசியின் மனத்தவிப்பு நரம்பியல் மனத்தவிப்பாக அமைகிறது. தன் மீது அன்பு செலுத்த ஒருவரும் இல்லை என்ற ஏக்கம் நரம்பியல் மனத்தவிப்பாக மாறுகிறது. தன் மீது அன்பு காட்டிய சரஸ்வதியின் இழப்பினால் உருவாகும் தவிப்பினைத் தணிக்க ஈடுசெய்தல் என்னும் தற்காப்பு உத்தியை அவனது தன்முனைப்பு மனம் பயன்படுத்துகிறது. அதன் பின்னர் அன்பிற்கான ஏக்கவுணர்வு ஆழமாகும் போது மற்றவர்கள் மீது அதிகமாக வெறுப்பினைக் காட்டி அவனது மனம் சமநிலை அடைகிறது. தன் மீது அன்பு காட்டிய சரஸ்வதியின் இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியாத மனநிலையும் அவளுக்குப் பின் தன்மீது அன்பு காட்ட எவருமில்லை என்ற எண்ணமும் அவன் மனதில் நரம்பியல் மனத்தவிப்பினை உருவாக்குவதால் அவனது மனம் பிறழ வாய்ப்பு ஏற்படுகிறது. அவ்வாறு மனநிலை பிறழாமல் இருக்கத் தற்காப்பு உத்திகளை அவனது தன்முனைப்பு மனம் நனவிலி நிலையில் பயன்படுத்தியதை ஆய்வின் வழி அறிந்து கொள்ள முடிகிறது.

## References

Anna Freud, (1993) The Ego and the Mechanisms of Defence, Karnac Books, London, England.

Dharani, D., Sumathi, C., (2021) The life of Nadaswara Artists showing the novel Sancharam, International Research Journal of Tamil, 3(4), 218-225. https://doi.org/10.34256/irjt21426

Kanchana, R., (2007) Ilakkiyamum Kaappu Uthigalum Padaippilakkiyamum, Ulagatamil Aaraichiniruvanam, Chennai, India.

Moovendhan, P.S., (2021) Regionalism and mythology in 'Sancharam' Novel, International Research Journal of Tamil, 3(S-1), 114-122. https://doi.org/10.34256/irjt21s118

Ramakrishanan, S., (2019) Sancharam, Desanthiri Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License